ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

ஸந்தேஹமுள்ளவன்.—சாஸ்திரக்ஞரைக்கண்டு ஓ! ஸ்வாமி!! வேதத்தில் விதிக்கப்பட்டவைகள் அப்படியே அனுஷ்டிக்கப்பட்டுவந்திருக்குமாயின் தற்காலத்திய ஆசாரமுமவ்விதமாகத்தானே இருக்கவேண்டும். அவ்வாறிருப்பதாகக் காணப்படவில்லை. சாஸ்திரவிதிக்கு மாறுதலாகப்பல ஆசாரங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக போஜனவிதியில் புஜிக்கத்தகாதவைகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளையும் உபனயன விவாஹாதி வைதிக காரியங்களில் சிலர் உபயோகப்படுத்துகின்றனர். முள்ளங்கி-வெங்காயம் முதலியவைகளையும் சிலர் சேர்க்கிறார்கள். வைதிக கார்யங்களிலேயே அப்படிச்செய்யும்பொழுது ராகத்தால் இஷ்டம்போல் செய்யப்படும் விருந்துகளிலும் கிளப்புகளிலும் கேட்கவேண்டுமா? இந்த ஆசாரம் வைதிகமுறைக்கு அழகா? வைதிக உபாத்தியாயர்கள் அந்த ஆசாரம் மீறி நடப்பவர்களை கண்டிக்கிறார்களா? அவர்கள் கிரஹத்தில் அந்த அனாசாரம் கண்டபிறகு போஜனம் செய்யப்போகாமலிருக்கிறார்களா? சாஸ்திரத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் இப்படியிருப்பது உசிதமாகுமா? இந்த ஸமசயத்தைத் தீர்க்கவேண்டும்.

சாஸ்திரக்ஞர்:—நீர் கேட்பது சரியே. எங்கமூலையிலோ சிலர் ஆசாரம் நீங்கி நடந்தார்களானால், சாஸ்திரமுறைப்படி நடப்பவர்கள் என்ன செய்வார்கள். அநேகம் சிஷ்டர்கள் அத்தகைய துராசாரங்களைக் கண்டித்துக்கொண்டுதானிருக்கின்றனர். அவர்களோடு சேராமல் பரான்னம் சாப்பிடுவதில்லையென்ற நியமத்தையும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சிலர் காசாசையால் கண்டபடி நடப்பார்களானால் அவர்களும் சிஷ்டகோஷ்டிக்கு வெளிப்பட்டவர்கள்தான். காலக்கொடுமையால் சாஸ்திர நம்பிக்கையில்லாதவர்கள் தலைமை வஹித்து கூட்டம் கூட்டி நமது ஆர்யச் சிறுவர்களையும் துராசாரத்தில் நுழையச் செய்கிறார்கள். அச்சிறுவர்களின் தாய் தந்தையர்களும் உத்தியோக ஆசையால் அதைச் சம்மதித்ததுபோலிருக்கின்றார்கள். இதனால் சிலர் கெட்டுப்போகிறார்கள். இப்படி சிலர் கெட்டுப்போய் விட்டதற்காக குற்றமற்றவரிடம் குறைகூறுவதுசரியா? “ஜன்மாந்தரீயமான துர்வாஸனையால கெட்டவழியிற் செல்லுகின்றவனை அடக்க நான் செய்த அடக்குமுறை என்னசெய்யப்போகிறது” என்று பகவானே ஓர் ஸமயம் பேசிவிட்டார். அப்படியிருக்கையில் கொடிய பிடிவாதம் பிடித்தவர்களை வைதிக உபாத்தியாயர் திருப்பவில்லையென்பது குற்றமாகாது. கதியில்லாமல் துராசார துர்போஜனாதிகளைச் செய்யநேர்ந்துவிட்டாலும், அதில் திருப்தியடையாத வைதிகர்களும் தன்னாலியன்றவரை பிராயசித்தம் செய்துகொள்ளுகிறார்கள், இது சாஸ்திர நம்பிக்கையைத் தெரிவிக்கவில்லையா? அதனாற்றான் பராசரமுனியும் பிராயசித்தத்தை 9-அத்தியாயங்களில் உபதேசித்திருக்கின்றார். துராசாராதிகள் நிர்கதியாய் நேர்ந்துவிட்டாலும் அந்தப் பிராயச்சித்தங்களை அனுஷ்டித்து யாவரும் சுத்தியடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

ப்ரஜாபதி-ஸூ ஆனிமீ ௪௨

# ஜாதிபேதம் ஸஹஜமே.

ஸர்வமங்களஸ்வரூபனாகிய உமாஸஹாயன் ஸன்னிதி முன்னர் கார்யமாகத்தோன்றும் இம்மாயா ப்ரபஞ்சத்தில் எந்தஜீவான்மாவும் தன்னால் பூர்வம் செய்யப்பட்டு பக்குவப்பட்டு அனுபவத்திற்குத் தயாராக இருக்கின்ற பாபபுண்ணிய கர்மத்தின்படி தாழ்ந்த— அல்லது உயர்ந்த சரீரமுதலியவற்றைபெறுவானென்பது வைதிகோத்தமரெல்லோரும் மறக்கப்படாத விஷயம். அவ்வகை உயர்ந்ததும் தாழ்ந்ததுமாகிய யோனிபேதங்கள்எண்பத்துநான்குலக்ஷமென வரையறுக்கப்பட்டிருக்கின்றது. இவ்வெண்பத்துநான்கு பேதங்களும் ஸோபான முறைமையாக ஜீவாத்மாக்களின் வினைக்குத் தக்கவாறு ஒன்றினொன்று தாழ்ந்ததும், ஒன்றினொன்று உயர்ந்ததுமாக சர்வபரிபூர்ண அகண்டிதாத்வைத பரமானந்த பரம்பொருளாகிய பரமேசுவரனுடைய ஆக்ஞையால் அமைக்கப்பட்டுள்ளன என்பது ஸர்வ ஸித்தாந்தமாயது. ஒருவர்க்கத்திலேயே பல பேதமேற்பட்டு அவற்றுள் உயர்வு தாழ்வு இயற்கையிலேயே அமைந்து கிடப்பது பிரத்தியக்ஷம். அவற்றுள் சில வருமாறு:—பசு வர்க்கத்தில் காராம்பசு முதலிய பேதமேற்பட்டு அவற்றுள் உயர்வு தாழ்வு கூறப்படுவதைக்கண்டிருக்கிறோம். அதுபோல் மேட (ஆடு) வர்க்கத்திலும் பல பேதமுள்ளதால் உயர்வுதாழ்வு கற்பிக்கப்படுகின்றது. இவ்வாறுபலவுள. ஸ்தாவரப்பொருளிலடங்கிய இரத்தினங்களில், பிராமண க்ஷத்திரிய-வைசியசூத்திரனெனப்படும் ஜாதிபேதம் வகுக்கப்பட்டிருப்பது இரத்தினபரீக்ஷகர்களுக்குத் தெரிந்த விஷயமே. ருத்திராக்ஷமணியிலுமிச்சாதிபேதமுண்டு. சிவலிங்கத்திலுமுண்டு எழுத்துக்களிலுமுண்டு. ஓஷதிகளிலுமுண்டு. ஜோதிஷசாஸ்திரமும் நான்குவர்ணங்(ஜாதி)களுண்டெனச் சித்தாந்தப்படுத்துகிறது. பரத நாட்டிய

நூல், ஸங்கீதநூல்களுமிவ்விஷயத்தில் சாக்ஷிகூறச் சித்தமாயிருக்கிறது, வைத்தியத்திற் புகுந்துபார்த்தாலங்குமிப் பேதம் விளங்கும். சான்றோர் செய்யுட்களிலும் ஜாதிபேதவார்த்தை நுழைந்துகொண்டிருக்கிறது. எவ்விடங்களில் பார்த்தாலும் இது இல்லாமலிராது இவ்விதமாக விஷைப்படியமைந்த சரீரத்தின்பிறப்பிலேயே உயர்வு தாழ்வு கூறப்படுவதும், கொண்டாடப்படுவதும் பிரமாணிகமென்றே புலப்படும். இதிற்சிலர் பிறப்பினாலேயே பேதங்கற்பிப்பது கூடாதென்றும், எப்படியாவது கற்பிக்கவேண்டுமென்று ஏற்பட்டால் அவரவர்கள் செய்யும் கர்மத்தாலேயே பிராணிவர்ணபேதம் கற்பிக்கப்படுவது நியாயமென்றும் கூறுவர். இதில் வேறு சிலர்—ஜன்மத்தில் எல்லோரும் சூத்திரரே தவிர பிராமணராகாரெனவுங் கூறுவர். இப்படியெல்லாம் கற்பிப்பதற்குப் பிரமாணம் அவரது திருவாக்கேயன்றி வேறில்லை. இது விஷயத்தில் வைதிகசித்தாந்தத்தை நிலை நாட்டவென்றே அவ்வப்பொழுது அவதரித்த மஹான்களின் செய்யாமொழி மூலமாய்வந்த வாக்கியங்களை அதிருஷ்ட விஷயத்தில்பிரமாணமாக நம்புவதுதான் பிராமணிகருக்கழகு. இவ்விஷயத்தில் குலகோத்திராதி யாதும் அறியப்படாதவர் தலையிடுவதும், அவரோடு பிராமணர்கள் வைதிகமுறையில் வழக்கிடுவதும் சரியல்ல, வைதிகமுறையைவிட்டு வியவகாரம் செய்யப்புகுந்தால் உண்மை விளங்காததோடு மாத்திரமல்ல, வைதிக நெறியும் பாழடையும் தக்க பிரதிவாதியோடு வாதம் புரிவதே வாதத்திற்கழகு. ஆகவே கீழ்காட்டிய பிரமாணநூல் படியும், பிராமாணிகரான வைதிகர் செய்யும் நிர்ணயப்படியும், ஜாதிபேதத்தைப் பிறப்புமுதற்கொண்டே அங்கீகரிக்கவேண்டியது அன்றியும் ஆஹாரத்தின் ஸாமான்யமையும் சரீரம் ஆஹாரபேதத்திற்குத் தக்கபடி பேதப்படுமென்பது யுக்திக்குமொத்ததே. இரத்தம், மாம்ஸம், எலும்பு முதலியவை உயர்ந்த சரீரத்திலும், தாழ்ந்த சரீரத்திலும் ஒரே சப்தத்தால் வியவஹரிக்கப்படுவதுபற்றி ஒரே மாதிரியாகவே இருக்குமென்று நினைத்துவிடக்கூடாது. அவைகளின் குணாதிகளுக்குள்ள பேதம் பிரத்தியக்ஷமாகவும், கிரந்தமூலமாகவும் காணக்கூடியதைப் பிடிவாதமாகக்கண்டித்துவிடத் துணிவது தகாதகாரியம். ஆகையால் ஜாதிபேதம் ஸஹஜமே. அதன் பிரிவுக்குத்தக்கபடி விதிக்கப்படும்

வர்ணாசிரம தர்மமும் பிராமாணிகமானதே. அதை அனுஷ்டித்து வரும் சிஷ்டர்களின் ஆசாரமும் ஸதாசாரமே. யாவரும் அதையே கைப்பற்றி க்ஷேமத்தை அடைவார்களாக. சுபம்!

பத்திராதிபர்.

# பிராம்மண்யம்.

(454-வது பக்கத்தொடர்ச்சி)

எவனால் பிராம்மண்யம் அடையக்கூடவில்லையோ அப்படிப்பட்டவர்கள் அதமனென்று கூறவேண்டும். சுக துக்கங்கள் முதலானதுகளை கெவனிக்காமல் உசிதகர்மத்தை அனுஷ்டித்தும் வெகு நியமங்களுடன் தபம் செய்தும் நான் அடையமுடியவில்லையே. மாதாவின் தோஷத்தால் நசித்ததான இந்த பிராம்மண்யத்தை அடைய எவ்வளவோ பிரயத்னங்கள் செய்தும் நடைபெறவில்லையே தைவத்தை பௌருஷத்தினால் மாற்றமுடியாதென்பது ரொம்பவும் சரி. ஆனாலும் என்னிடத்தில் உமக்கு அனுக்கிரகம் செய்வதான எண்ணமிருந்தால் நானும் அதற்குத் தக்கதான புண்யங்களையும் செய்திருந்தால் ஆகாயத்திலும் பூமியிலும் நான் இஷ்டப்படி உருவங்கொண்டு சஞ்சரிக்கவும் பிராமணர்களும் க்ஷத்திரியர்களும் என்னைக்கண்டால் உபசரிக்கும்படியாக யெண்ணமுண்டாகும்படிக்கும் வரன்கொடுக்கவேண்டுமென்றும் கேட்டான். அதே மாதிரி சந்தோதேவனென்று பெயர்கொடுத்து நீ ஸ்திரீகளால் அவசியம் பூஜிக்கப்படுவாய் உனக்குவிஸ்தாரமான கீர்த்தியுண்டாகும் என்றும வரம் கொடுத்துச் சென்றார். மதங்கரும் அதேமாதிரி உலகத்தில்வசித்து மரித்தபிறகு உத்தம லோகஞ்சென்றார். இந்த சரித்திரத்தைப்போல் எந்த விதமாகவாவது துர்லபமான இந்த பிராம்மண்யத்தை அடைந்தும் அதை ஸன்மார்க்கத்தினால் காப்பாற்றிக் கொள்ளாவிட்டால் குறைந்து விடுவதோடு அதிகதுக்கத்தையுங் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை. இந்த பிராம்மண்யத்தை விருத்திசெய்துகொண்டால் பிரம்ம ஞானம் ஸுலபமாக ஏற்படுமென்று நினைக்கவேண்டும். ஆகையால் பிரம்பில்லாமலிருக்கும்பொருட்டுநமக்குக்கிடைத்திருக்கும் பிராம்மண்யத்தை காப்பாற்றிக்கொள்வது அவசியம்.

S. கச்சபேச்வர சாஸ்திரி

# ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகளுக்கு ஓர் எச்சரிக்கை.

(பாரதீபுத்திரன் எழுதியது)

இதுகாறும் அத்வைதம் அவைதிகம் என்று கூறிக்கொண்டிருப்பது சரியல்லவென்றும் இதனால் வகுப்புச்சண்டைகள் ஏற்படுமென்றும் பிறர் மதத்தை நிந்தித்தல் நெறியற்றதாகும் என்றும் கூறிவந்திருக்கிறார்.

இப்பொழுது உள் விபரங்களில் சிறிது இறங்குவோம். கும்பகோணம், புதுக்கோட்டை, மதுரை இந்நகரங்களில் ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகள் நடத்திய விசாரங்களில் அவர் வெற்றி அடையமுடியாமற்போனதுமன்றி பல இடங்களில் 'அத்வைதம் அவைதிகம்' என்று தான் கூறவில்லையென்றும் இதற்குத்தான் எவ்விதத்திலும் பொறுப்பாளி அல்லவென்றும் சொல்லிவருகிறார்.

ஆனால் இதற்கு முரண்படும்வண்ணம் ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகளின் உபதேசம் என்ற புத்தகத்திலும் 'கும்பகோணம் துவைதாத்வைத விவாதம்' எனும் நூலிலும் 'மாத்வமித்திரன் பத்திரிகையிலும்' மாறான அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

எவை எப்படியிருப்பினும் சிலமுக்யமான எச்சரிக்கைகளை நாம் இந்த ஸமயத்தில் செய்ய விரும்புகிறோம்:—

1. ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகள் அத்வைதம் அவைதிகம் என்ற பக்ஷத்தை உண்மையில் உபயோகித்திராவிடில் எவ்விதமான விவாத ஸபைகளுக்கும் இடமில்லாமல் இருந்திருக்கவேண்டும்.

2. ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகள் இச்சபைகளில் சரியான பதில் கூறவில்லை என்பதும் ஆங்காங்கு அபவாதத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்காக சமயத்திற்கேற்ற பதிலை அளித்திருப்பதுமன்றி பிறகு பழைய வழியிலே திரும்பியிருப்பதாகவும் தெரியவருகிறது.

3. இச்சபைகளின் விபரங்களை ஆராயமுற்படுவோமானால், எந்த நிலையில் இருந்துகொண்டு 'அத்வைதிகளால் அத்வைதம் அவைதிகம் அல்ல' என்று ஸ்தாபிக்கமுடியவில்லை என்று ஸ்ரீ உத்திராதி ஸ்வாமிகள் பிரஸங்கித்து வருகிறாரோ அதே நிலையில் அவ

ரும் 'அத்வைதத்தை அவைதிகம்' என்று ஸ்தாபிக்கமுடியா தவராகவே இருந்து வந்திருக்கிறார் என்பது வெள்ளிடைமலை.

இதன்மூலம் ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகள் அத்வைதம் அவைதிகம் என்று ஸ்தாபித்துவிட்டதாகவாவது அல்லது அதைச் சார்ந்தவர்கள் கெட்டவழியில் பாழாய்ப்போகிறவர்கள் என்றுநிரூபித்துவிட்டதாகவாவது கூறமுடியாது.

குறிப்பு:— அத்வைதிகள் ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகளுக்குப் போட்டியாக 'த்வைதம் அவைதிகம்' என்றுசொல்ல விரும்பவில்லை. அத்வைதம் அவைதிகமென்ற நெறிதவறிய வார்த்தைகளையே கண்டித்து வருகிறார்கள். வகுப்புச் சண்டைகளில் தலையிட விரும்பாத காரணத்தால் ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகளின் பாமதநிந்தை முறையை கைக்கொள்ள விரும்பவில்லை. அத்வைதிகளின் ஸித்தாந்தப்படி கிருஸ்துவமதம் முதலான இதர மதங்களிலிருப்பதும் த்வைத நிலையில் இருப்பதும் மற்றும் பற்பல நிலைமைகளுக்கேற்ற நாநா அவஸ்தைகளில் இருப்பதும் முடிவான எல்லையை அடைவதற்கு முன் ஏற்பட்டுள்ள படிக்கட்டுகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. இதனின்று ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகள் வெற்றிக் கொடியை நாட்டிவிட்டதாக கருதப்பட முடியாது.

4. இச் சந்தர்ப்பத்தில் அத்வைதமதமும் மற்ற உலகமதங்களும் கெட்டவழியில் செலுத்துவன என்றும் பிறமதங்களைச் சார்ந்தோர் நல்வழியை அடைவதற்காக ஸத்யமதமாகிய த்வைத மதத்தைக் கருணையுடன் உபதேசிக்கும் பெரியார் உத்திராதிஸ்வாமிகளென்றும் மாத்வமித்திரனில் வரையப்பட்டிருக்கிறது. தந்தை மகனுக்கு புத்திமதி கூறுவதுபோல் என்ற உதாஹரணத்துடன் ஸ்ரீ த்வைதாசாரியரின் கடமை கெட்ட மதத்திலிருந்து நல்ல மதத்தில் ஜனங்களை சேர்த்தல் என்று ஏனையோர்கள் அத்வைத மதத்தை ஆச்ரயித்து பாழாய்ப் போகக்கூடாதென்று ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகள் உபதேசிப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது இவ்வுபதேசங்களைக்கேட்டு சிலயோக்யர்கள்(தவறுன) தங்கள் மதத்தைவிட்டு விலகிச் சென்றனர் என்றும் சிலர் இல்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

5. நாம் ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகளின் வ்யக்தியில் சிறிதும் துவேஷம் கொள்ளவில்லை. ஆனால் அவரது முறையை கடுமையான எச்சரிக்கைகளுடன் பலமாய்க் கண்டிக்கிறோம்.

6. மாத்வ வகுப்பிலுள்ள பல பிரிவினர்களுள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினருக்கு ஆசார்யர் என சொல்லப்படும். இவர் உலகிலுள்ள அகிலமதங்களுக்கும் மதபோதகரல்லவென்பதை தெளிவுபடுத்துகிறோம்.

7. அர்த்தவாத முறையில் தன் வகுப்பாருக்கு உபதேசிக்கையில் த்வைத ஸித்தாந்தத்தை தெளிவுபடுத்தி ஒருவாறு பிற ஸித்தாந்தங்களை மறுத்துக்கூறிக்கொண்டிருக்கலாம்.

8. ஆனால் உலகில் வெளிப்பட்டு அத்வைதம் முதலான கெட்ட மதங்களால் ஜனங்கள் பாழாய்ப் போகாமல் நல்வழிப்படுத்துவதே மதாசாரியரின் கடமை என்று சொல்லி, அத்வைத மதத்தை தூற்றுவதும் பிறரை தன் மதத்தில் சேர்த்து ஒழுங்குபடுத்துவதாகச் சொல்லி மதமாற்றம் செய்வதும் நகைப்பிற்கும் கலகத்திற்கும் இடமளிப்பதாகும்.

9. பிறருக்கு வருத்தமேற்படாமலும், பிறரை நிந்திக்காமலும், பிறர் உணர்ச்சிக்கு பங்கம் நேரிடாமலும் தனது நடவடிக்கைகளாலும் அந்தக்கரண பரிசுத்தத்தாலும் பிறர் தாங்களாகவே தன்வழியைப் பின்பற்றும்படி செய்வதே பெரியாரின் கடமையாகும்.

10. ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகளை எங்கள்மதகுரு என்று நாங்கள் அங்கிகரிக்கவில்லை.

11. அவர் ஸர்வக்ஞர் என்றும் அவருடைய வார்த்தைகள் உண்மையானவைகள் என்றும் நாங்கள் நம்பவில்லை.

12. அறிவில் அவரைவிட சிறந்தபல யோகிகளும் ஞானிகளும் எங்களுக்கு வழிகாட்டிகளாய் இருந்து வருகிறார்கள்.

13. ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகளுடைய உபதேசம் எங்களுக்குத் தேவையில்லை.

14, எந்த அத்வைதியும் தங்களுக்கு ஆசார்யாராக இருக்கக்கூடிய யோக்யதை அவருக்கிருப்பதாக ஒப்புக்கொள்ளவில்லை.

சில யோக்யர்கள் ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகளின் உபதேசத்தைக்கேட்டு தங்கள் மதத்தைவிட்டு விலகிச் சென்றதாக குறிப்பிட்டுள்ளதன் மூலம் விலகாதவர்கள் அயோக்யர்களென்று மறைபொருளாக மாத்வமித்திரன் ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது ஆசார்யரின் வாசனையால் பிறர் மதத்தை நிந்திப்பதில் ஏற்பட்ட அவருடைய ஆர்வத்தை வெளியிடுகிறது. இதை அவர் யோக்யப் பொருப்புடன் வாபீஸ்வாங்கிக் கொள்வாராக.

எந்த ஸமூகத்திலும் எந்த மதத்திலும் போதிய படிப்பு இல்லாதவர்களோ அல்லது பண ஆசை பிடித்தவர்களோ அல்லது மதநிந்தை செய்பவர்களோ இருந்தேதீருவார்கள் அத்தகையவர்களின் கூற்றுகளால் மதமாற்றம் ஏற்படலாம். ஒரு சிலர் பாதிரிகளைப்போன்று மதமாற்ற பிரசாரம் செய்வதனாலும் அவைகளைக்கேட்டு மதமாறுவதாலும் பரிசுத்தமாகிய மதத்திற்கு குறைவு ஒன்றும் ஏற்பட்டுவிடுவதில்லை. ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகளின் உபதேசத்தால் சில யோக்யர்கள் மதம் மாறினரென்று சொல்லப்படுவதன் மூலம் மதமாறாதவர்கள் அயோக்யர்கள் என ஆர்த்தத்தால் புகட்டுபவர்களுக்கு வருங்காலத்தில் எத்தகைய நிகழ்ச்சிகள் நேரிடுமோ என்று இன்றையதினம் எச்சரிக்கை செய்கிறோம்.

நாங்கள் பலாத்காரத்தில் நம்பிக்கை படைத்தவர்களல்ல. ஆனாலும் ராமனும் கிருஷ்ணனும் ஏனையோரும் அவதரித்த காலத்து பலாத்காரத்தைக்கொண்டே சத்துருக்களை ஒழித்திருக்கிறார்கள்.

மஹாத்மா காந்தியும் அஹிம்ஸா தர்மத்தை எவ்வளவு பலமாகப் போதித்து அனுஷ்டித்துவந்தபோதிலும் எதிர்பாராத விதமாக அவரது முதல் சுதந்திரயுத்தத்தில் பல பலாத்காரசெயல்கள் நடந்தேயிருக்கின்றன. சென்றவருஷம் நடந்த சுயேச்சைப் போரிலும் எவ்வளவு சாத்வீகத்துடன் தேசத்தொண்டர்கள் நடந்துகொண்டிருந்தாலும் ஒருசில இடங்களில் பலாத்காரம் நடைபெறாமல் இல்லை

உலகின்போக்கு இவ்விதம் இருந்துவருவதால் அடங்கியுள்ள உணர்ச்சியைத்தகாத முறையில் தூண்டிவிட்டால், பிறர் மதத்தை நிந்தித்தால், வேண்டாதபோது தனக்குத்தானே

Certfiy செய்துகொண்டு உலகமதங்களைத் தாக்க முற்பட்டால் முக்யமாக தற்சமயம் அத்வைத மார்க்கத்தை அவைதிகமெனக் கூறினால் அமைதியின்மை ஏற்படும். வகுப்புவாதம் ஓங்கும் சமூகச்சண்டைகள் உண்டாகும் ரத்த ஆறுகள் ஓடும்.

நாங்கள் ரத்த ஆற்றைக்கண்டு பயப்படவில்லை. ஆனால் இதே சமயத்தில் சாத்வீகத்தன்மையுடன் நடக்கவே விரும்புகிறோம். ஸமாஸத்தை நாடுகிறோம். தவறிய மார்க்கத்திலே எதிர்பாராதவிதமாக மதஉணர்ச்சி கிளப்பப்பட்டால் அக்ரமமான வழியிலேஅத்வைதமதம் நிந்திக்கப்பட்டால் மாறான முறையிலே மத மாற்றம் நடந்துகொண்டிருந்தால் மதச்சண்டைகள் ஏற்படலாம். ஏற்படின் உயிரைக்கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மாத்வர், ஸ்மார்த்தர் இவர்களின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டால் அதனால் ஏற்படக்கூடிய பாதகம் ஒருவாறு மதிப்பிடப்படலாம்.

ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகள் உபதேசத்தாலும் மத மாற்ற பிரசாரத்தாலும் வகுப்புச்சண்டை சந்தேகமில்லாது ஏற்படப்போகிறது. ஸ்மார்த்தர்கள் பலர் தங்கள் தேகங்களை அர்ப்பணம் செய்வார்கள். இதற்கு குறைவுபடாத ஊக்கத்துடன் மாத்வர்களும் உயிரைத் துறப்பார்கள்.

ஸ்ரீஸ்வாமிகள் அத்வைதத்தை அவைதிகமென்று நிந்திப்பதால் இதுவரை ஏற்படாத பெரிய வகுப்பு யுத்தம் ஏற்பட்டு, பிறர்வகுப்புகளில் பலர் தியாகம்செய்ய மாத்வர்களிலும் பலர் தியாகத்திலீடுபடுவார்கள். பிற வகுப்புகளுக்கும் தன் வகுப்புக்கும் சண்டையேற்பட்டு நாசத்தை உண்டுபண்ண விரும்புகிறாரா என்று நாம் உத்திராதி ஸ்வாமிகளைவினவுகிறோம்.

மேலும் அத்தகைய போர் ஒன்று நிகழ்ந்தால் அத்வைதிகளுக்கு அதிக நஷ்டமில்லை என்பதை விசதப்படுத்துகிறோம். மாத்வர்களுக்கு ஸமமான ஸ்மார்த்தர்கள் இவ்வுலகினின்று ஒழியலாம்.

பரமத நிந்தையால் ஏற்படப்போகிற விசேஷங்களை இன்று ஞாபகமூட்டுகிறோம். அஹிம்ஸையை மனதில்கொண்ட சாஸ்திர ரத்னாகரம் யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளின் ஸமாஸ இனியமொழி

களையே மொழிகின்றோம். நமது மஹாபெருந்தலைவரான மகாம கோத்யாய அனந்தகிருஷ்ண சாஸ்திரிகளின் வீரவார்த்தைக ளையே வரைகின்றோம். தேதியூர் சுப்ரமண்ய சாஸ்திரிகளின் இடி முழக்கத்தையே கர்ஜிக்கின்றோம். (இது கட்டுக்கதையல்ல. எட்டுச்சுரைக்காய் அல்ல. இரவில்கண்ட கனவும் அல்ல)

வகுப்புச் சண்டையை உண்டாக்குவதற்கு மூலகாரணமாக வுள்ள மத நிந்தையை ஒழிக்கத்தகுந்த நடவடிக்கைகளை எடுத் துக்கொள்ளவேணுமென்று அரசாங்கத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மாத்வ பிரமுகர்களும் ஸ்மார்த்த பிரபலஸ்தர்களும் சமா தான பங்கம் ஏற்படாமலிருக்க முன்னெச்சரிக்கையான நடவ டிக்கைகளை எடுத்துக்கொள்வார்களாக.

ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகளும் அத்வைதம் அவைதிகம் என் னும் மத நிந்தையை ஒழிப்பாராக.

மத நிந்தை ஒழிக. வகுப்புவாதம் வீழ்க. மதமாற்றம் துலைந்திடவே ஸமரஸம் ஓங்க. சமாதானம் பரவ. சாந்தியும் நிலைத்திடவே. சுபம்.

ஓம் ஓம் ஓம்

---

ஸநாதன தர்மஸம்ரக்ஷணம். நெ. 6

# ப்ராம்மண ஸமூக கைங்கர்யம்.

கண்விழியுங்கள்! கண்விழியுங்கள்!!

இதனால் சகலப்ராம்மணர்களுக்கும்அறிவிப்பதுஎன்னவென்றால்:-

நாளது வருஷ சித்திரைமீ 26, 27,உ (9—5—31, 10-5-31) களில் தஞ்சைமாநகரில் நடைபெற்ற ஸநாதன தர்மஸம்மேளனம் யாவருக்கும்தெரிந்ததே. அந்தஸம்மேளனத்திற்குவிஜயம்செய்ய சௌகரியமில்லாதவர்களுக்கு அறிவிக்கும்பொருட்டும் விஜயம் செய்திருந்தவர்களுடைய ஞாபகார்த்தமாகவும் நம்முடைய பிரா மண ஸமூகம் க்ஷேமமடைய வேண்டுமென்று கருதி ஷை சம் மேளனத்தில் அக்ராஸனம்வஹித்த ப்ரும்மஸ்ரீ யக்ஞஸ்சாமி சாஸ்

த்ரிகள்முதலியப்ராமுகர்கள் கூடிசெய்ததீர்மானங்கள் சுருக்கமாய் இதனடியில் விவரிக்கப்படுகின்றன.

அவரவர்களாலியன்றமட்டில் ப்ராம்மணர்கள் எல்லோரும் அவைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டியது.

I. ப்ராம்மணக் குழந்தைகளுக்கு(1)ஸமஸ்கிருத பாஷையை அவசியம் கற்றுக்கொடுக்கும் விஷயத்திலும்(2) 7-வது அல்லது 8-வது வயதிலேயே உபநயன ஸம்ஸ்காரத்தை விதிவத்தாய் செய்வித்து அதன்பின் இரண்டு வருஷமாவது வேதாத்யயனம் செய்விக்கும் விஷயத்திலும் (3) ப்ரும்மோபதேசம் ஸந்தியாவந்தனம் முதலிய முக்கிய வேதமந்த்ரங்களுக்கு தாத்பர்யம் சொல்லிக்கொடுக்கும் விஷயத்திலும், ப்ராம்மணர்கள் விசேஷமாய் தங்கள் கவனத்தைச்செலுத்த வேண்டியது.

இதற்கு உபாயம்:—ஒவ்வொரு அக்கிரஹாரத்திலும் ப்ராம்மண ஸபைகள் ஏற்பாடுசெய்து ஒரு பண்டிதரையும் ஒரு அத்யாபகரையும் நியமித்துக்கொள்ளவேண்டியது.

ப்ராம்மணனாய்ப்பிறந்த ஒவ்வொருவரும் தர்ம உண்டியல் கலயம் ஒன்றை தன் கிருஹத்தில் ஏற்பாடுசெய்து தவறாமல் மூன்றுநாளுக்கொருதரம் காலணா போட்டுச்சேரும் தனத்தையும் ஒவ்வொரு பிராம்மண கிருஹத்திலும் நடக்கும் சுபசோபனதி எல்லா விஷயங்களிலும் ஆரம்பம்முதல் முடிவுவரையில் ஏற்படும் அனுக்ஞை முதலிய எல்லா தக்ஷிணைகளிலும் ஒருவைதீக பிராம்மணருக்கு கிடைக்கக்கூடிய ப்ரயோஜனம்போல் ப்ராம்மண சமூக கைங்கர்யத்துக்காக புரோகிதரிடம் பொறுப்புக்கட்டி ஒரு பங்கு எடுத்துச் சேரும் தனத்தையும் பிரதிமாஸமும் ஸபையாரால் நியமிக்கப்படும் உத்யோகஸ்தரிடம் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவேண்டியது.

காசாய் உண்டில் போட அசவுகர்யமுள்ளவர்கள் தினம் காலையில் சமையலுக்கு அரிசியெடுக்கும்போது ஒருபிடியரிசி நாள்தவறாமல் எடுத்து சேர்த்து பிரதிமாஸமும் சபையாரிடம் ஒப்புவித்து விடலாம்.

இந்தக்காலத்தில் இதைவிடப் பிராமணர்கள் செய்யக்கூடிய தர்மம் வேறில்லை.

2. ப்ராம்மணர்கள் ஜீவனத்திற்காக ப்ராசீனவழிகளை அனுஸரிப்பதும், வியாபாரம், கிருஷி முதலிய பாதந்த்ரமில்லாத தொழில்களைச் செய்வதும் உசிதமே ஒழிய சேவகா விருத்தி செய்வதானது வெகு அதமமென்று நம் சாஸ்திரங்களால் கண்டிக்கப்பட்டிருக்கிறது.

3. எந்த ப்ராம்மணரின் வீட்டு விவாஹமானது வாதட்சணை ஏற்பாட்டின்பேரில் நடக்கிறதோ அந்த விவாஹத்திற்கு இதர ப்ராம்மண பந்துக்களும் சிநேகிதர்களும் போகிறதில்லை என்று கட்டுப்பாடாயிருக்கவேண்டியது.

4. விவாஹங்களில் ப்ரவேசஹோமம் வரையில் விவாஹத்தன்று நடக்கவேண்டிய விஷயங்களை மட்டில் வதூ வீட்டில் நடத்தி ப்ரவேச ஹோமம் முதற்கொண்டு சேஷஹோம பர்யந்தம் நடக்கவேண்டிய கார்யங்களை வரன் வீட்டிலேயே நடத்துவது சாஸ்த்ரீயமானதாலும் அப்படிச்செய்வது பெண் வீட்டுக்காரரின் பளுவைக் குறைக்குமானதாலும் அந்தப்படி அனுஷ்டிக்கவேண்டியது.

5. ஜாதகர்மாதியான எல்லாஸம்ஸ்காரங்களையும் காலத்தில் விதிவத்தாய் நடத்தவேண்டியதில்மட்டில் மனதைச் செலுத்தி அனாவசியமான செலவுகளை செய்யாமலிருக்கவேண்டியது.

ப்ரஜோத்பத்தி௵, வைகாசிமீ 20உ. } தஞ்சை ஜில்லா ப்ராம்மணர் ஸநாதன தர்ம ஸம்ரக்ஷண ஸபையார்.

---

# பிராம்மண்யச் சிறப்பு.

"மற்றைய வர்ணங்களைக்காட்டிலும் பிராமணன் முதலாயினேன்" என்று வேதசாஸ்திர சம்மதமாயினும் அதன் உள்கருத்தையும் உயர்வின் வழியையும் அறியவேண்டியது அவச்யமே?

இதர லோஹங்களைவிட பொன் உயர்ந்ததாயினும் அதன் மாற்றுக்குத்தக்கபடிசிறப்பிருக்கிறதல்லவா? அதைப்போல் பிராம்மண்யச் சிறப்பிலும் காண்க.

1. பிராமணனல் பிராமணியினிடத்தில் உண்டுபண்ணப் பட்டு உபநயனமாவதற்குமுந்தி அவனை "ஜாதன்" என்று சொல்லப்படுகிறது. ஆபஸ்தம்பமுனிவரும் தனது கிருஹ்ய ஸூத்திரத்தில் ஜாதகர்மம் கூறும்போது " जातं वात्सप्रेणाभिमृश्य " என்று ஜாதசப்தத்தால் தெரிவித்தார்.

2. உபனயனமாய்விட்டால் "தேவர்களுக்கு விருதசாரீ" देवानां व्रतचारी என்று பெயர். இவன் செய்யவேண்டிய ஆச்ரம உசித கார்யங்களை உபநயனமானதும் பிரதிஜ்ஞாரூபமாக சொல்லச்செய்கிறார்கள். நீ பிர்ம்மசாரியாகிறாய் என்றால் 'ஆம்' என்பது முதலான ஆறு ச:ஸநங்களால் அங்கிகரிக்கச்செய்கிறார்கள்.

3. பிறகு வேதத்தில் சிலபாகங்களை (அதாவது ஸ்ரீ ருத்திரம், புருஷஸூக்தம், பஞ்சசாந்தி, உபநிஷத் முதலான ஸ்வகர்மானுஷ்டானத்துக்குத் தேவையானதுகளை) அத்யயனம் செய்தவன் பிராமணன் எனப்படுவான். ஆகையால் கொஞ்சமேனும் வேதம் ஓதினவனே பிராமண சப்தத்துக்கு பொருளாகிறான் இல்லாவிடில் "விராத்தியன்" ஆகிறான். இதுவிஷயமாய், வைத்தினாத தீக்ஷிதர் ஆஹ்நிககாண்டத்தில் பிர்மயக்ஞ முறைகூறும்போது அத்யயனம் செய்யாதவன் பிர்மயக்ஞம் எப்படிசெய்கிறது? என்கிறகேள்விக்கு அத்யயனம்செய்யாதவன் என்றால் வேதம் முழுதும் ஓதாமலே என்றும் அடியோடு வேத மந்திரமே அறியாதவன் விராத்தியனாகையால் அவனை அதற்குப்பொருளாய்க் கொள்ளக்கூடாது" என்றும் விளக்கியிருக்கிறார் விராத்தியன், ஸம்ஸ்காரஹீனன், வைதிகஸம்ஸ்காரங்கள் ஏறுவதால் பாபத்தில் அருசி ஏற்படுகிறது என்பது சாஸ்திரசம்மதம்.

4. ஒருசாகையை பூர்ணமாக அத்யயனம்செய்திருப்பவன் சுரோத்திரியன் இந்த சுரோத்திரியருடைய அன்னத்தைத்தான் புகழ்ந்திருக்கிறது. याचयेत् श्रोत्रियस्यान्नं इति என்று. இவருடைய வீட்டிலிருந்து அக்னியை வாங்கிவந்து ஹோமாதிகள் செய்வது சிறந்தது. श्रोत्रियागाराद्वाहार्यः ஆப.கிருஹ்யம்-- இவருக்கு தானம்செய்வதை अयुतं श्रोत्रियेदानम् ஒன்றுக்குப் பதினாயிரம் பலன் அளிக்கிறதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

5. வேதத்தை சிக்ஷை, வியாகரணம், சந்தஸ் நிருக்தம், ஜோதிஷம், கல்பம் என்கிற ஆறு அங்கத்துடன் அறிந்தவன் அநூசானன்,

6. கல்பங்களுடன் அத்யயனம் செய்திருப்பவன் "ரிஷி கல்ப்பன், ரிஷிகளுக்கு சற்றேறக்குறையவன்.

7. ஸூத்திரங்களுடன் இதரர்களும் அறியும்படி சொல்லி வைப்பவன் "ப்ரூணன்" ப்ரூண சப்தங்கள் இந்தப்பொருளுடையதாக வேதத்தில் பல விடங்களில் காணப்படுகிறது, இவ்வித ப்ரூணருக்குத் துரோகம்செய்வது மிகவும் பாபம்.

8. நான்கு வேதங்களேயும் ஓதியிருப்பவன் "ரிஷி" ரிஷியைப்பற்றி ஓர் உபாக்கியானம் இரண்டாங்காண்டம் 5-வது பிரச்னத்தில் 8-வது அனுவாகத்தில் உளது. நிருமேதன் என்பவனும், பருச்சேபன் என்பவனும் வேதம் ஓதினார்கள். இந்த ஈரக்கட்டையில் அக்னியை உண்டாக்குவோம் என்றும் யாரால் உண்டாகிறதோ அவன் வேதவீர்யமுள்ளவன் என்றும் சொல்லிவிட்டு, நிருமேதன் ஓதும்போது அந்த ஈக்கட்டை புகைந்தது. பருச்சேபன் ஓதும்போது ஆர்த்ரதாரு ஜ்வலித்தது. அதனால் நீயே ரிஷி என்றழைத்தான். இம்மாதிரியான ரிஷியின் பிரபாவம் பலவாறு இருப்பினும் நாம் கண்கூடாகக் காண்கிறது ஒன்றே. கலியின் கோலாஹலத்தால் கீழ்மேல் கவிழ்ந்துபோயிருந்தும் பிராமணர்கள் ரிஷிகளின் மக்கள் என்றும், அதுவும் அவர்களின் கோத்திரத்தால் தெரிகிறதென்றும், அவர்கள் ஸௌகர்யங்கள் எவ்வளவு பாதிக்கப்படினும் ஸ்வதர்மத்தைக் கைவிடாது காப்பாற்றப்பட்டு வருவதாலும், புத்தியினாலும், ஞானத்தினாலும் செய்துமுடித்தும் கார்யங்களில் இவர்களே முன்னிற்று ஜயம்பெற்றுவருவதாலும் பிராமண்யம் தைய்வீக சக்திவாய்ந்த ஓர் தனிப்பட்ட பிரிவேயாகும். இதை அழிக்கவாவது, மாற்றவாவது, கலக்கவாவது எவ்வித கெடுதியாவது செய்வதும் முடியாது என்றும், இவ்விதபிராம்மண்யத்தைக் கார்க்கவே ஸ்ரீகிருஷ்ணன் அவதரித்தார் என்பது கீதா பாஷ்யத்தால் வெளியாகிறதினாலும், மேற்கண்ட எட்டுவித மகிமையுடன் கூடியவர்களேப்பெற வேண்டில் தம்பதிகள் இருக்கவேண்டிய விருத நியமங்களே அதற்குத்தக்கபடி கூறுவது கல்ப ஸூத்திரங்கள் ஆனதினாலும் அதில் உரைத்தபடிசெய்து ஆஸ்திக மறையோர்கள் சிரேயஸ்ஸை அடைவார்களாக. இந்த எட்டுவிதப்படிக்கும் மேற்பட்டவன் தேவன் அந்த தேவத்தன்மையிலிருந்து மேன்மேல் சென்று

“தானே சிவன்; பிர்மம்” என்கிறவரையில் ஆவதற்கு பிராம்மண்யமே அடிப்படையாய் இருக்கிறது. இவ்வித மகிமையை சிற்றறிவுடைய நான் எழுதுவது ஸாகஸமாயினும் பிராமண்ய விச்வாஸத்தால் ஏற்பட்டதாக ஏற்கவேண்டி இதை முடிக்கிறேன்.

சுபம்.

“காச்யப” உ. வெங்கடராமன்.
காட்டுமன்னார்கோவில்.

---

# தாயபாகத்தின் உண்மை.

ஸகோதரர்கள் ஒரேதாயின் இடம் உண்டானவர்களாயினும் தனித்தனியே ஜீவனம் செய்து வருபவர்களாய் காணப்படுகிறார்கள். இது எல்லா ஜாதியர்களிடமும் ஸமயமாயிருந்தாலும் இந்துக்களிடம் உள்ள விசேஷத்தை இங்கு குறிப்பிட வந்தேன்.

தன் சரீரத்தையே நிலையாக எண்ணும் நாஸ்திகர்களும் மற்றுமுள்ள விதேசியர்களும், தனித்தனியே வாழ்ந்துவருவது, திரவியத்தை ஸம்பாதிப்பதற்கும், நிலையில்லா புகழை அடைவதற்கும், தம் மக்கள் மனைவியையும் காப்பதற்குமே முக்கியமாய் ஏற்பட்டுவருகிறது.

தர்மத்தையே அடிப்படையாய்க்கொண்டு ஒவ்வொருகார்யத்தையும் நடாத்திவருகிற இந்துமக்களுக்கு தனித்துவாழ்வதும் தர்மசேவையேயாகிற்று. வால்மீகி ராமாயணம் 32-ஸர்க்கம்.

விதர்ப்ப தேசத்தில், மகாதபோபலமுள்ளவரும், ஸாதுஜனங்களைப் பூசித்து அவர்களின் ஆசீர்வசனங்களை பெற்றுவருபவரும், தர்மந்தவறாது நடப்பவருமான குசன் என்ற ராஜரிஷி ஒருவர் இருந்தார். அவர் குசாம்பன், குசநாபன், ஆதூர்த்தரஜஸன், வஸு எனும் நான்கு குமாரர்களை உண்டாக்கினார்.

தர்மிஷ்டர்களும், ஸத்யவாதிகளுமான, அன்னான்கு குமாரர்களையும், கூப்பிட்டு புத்திரர்களே? நீங்கள் பிரஜைகளைக் காப்பாற்றும் கடமையான அதிகமான தர்மத்தை அடையுங்கள். என்று

சொன்னூர். குசனுடைய ஆக்ஞைப்படி, குசாம்பன் இப்போது பீஹார் என்று வழங்கும் கௌசாம்பிநாட்டையும், குசநாபன் மகோதயநாட்டையும், ஆதூர்த்தரஜஸன் தர்மாரண்யத்தையும், வஸு கிரிவ்ரஜம் எனும் தேசத்தையும் ஆண்டுவந்தனர். இதனால் குசாம்பன் முதலானவர்கள் அந்தந்த தேசத்தில் இருந்து "தனியே தர்மத்தை அனுஷ்டித்துவந்தனர்" என்று ஏற்படுகின்றது. ஆனால் இங்கு ஓர் சங்கை நிகழ்கின்றது. ஸகோதரர்களுக்குள் மூத்தவனால் கர்மானுஷ்டானம் செய்யப்பட்டால் மற்றெல்லோராலும் செய்ததாக ஆகிறது. என்பதை, மரீசி கூறுகிறார்.

बहवस्यूर्यदा पुत्राः पितुरेकत्रवासिनः ।
सर्वेषांतुमतं कृत्वाज्येष्टेनैवतुयत्कृतम् ॥
द्रव्येण चा विभक्तेन सर्वैरेवकृतं भवेत् ॥

ஒரு பிதாவுக்குப் பல புத்திரர்கள் இருந்து ஓரேயிடத்தில்வஸித்து வருவார்களேயானால், மற்றவர்களுடைய சம்மதத்தைப்பெற்று ஜேஷ்டனால் ஓர் கார்யம் பொதுத் திரவியத்தினால் அனுஷ்டிக்கப்பட்டால் அது எல்லோராலும்செய்ததாகிறது.

இப்படியே ஸ்ரீபாரதம் அச்வமேதபர்வத்தில் தர்மபுத்திரரைக் குறித்து ஸ்ரீ கிருஷ்ணபகவான்,

भीमसेनार्जुनश्चैव तथा माद्रवतीसुतौ ।
इष्टवन्तोभविष्यन्ति त्वयीष्टवति पार्थिव ॥

தர்மபுத்திரரே? நீர்யாகம் செய்தால் பீமன், அர்ஜுனன், நகுலன் ஸகதேவன் இவர்கள் யாகம் செய்தவராகின்றனர். என்று கூறினார். இதைப்போல் பல வசனங்களும், ஸ்ரீராமர், யுதிஷ்டிரர் போன்ற மகான்களுடைய ஆசாரமும் இருக்க, குசாம்பன் முதலாயினோர் ஏன் தனித்தனியே தர்மாசரணம் செய்தனர்? என்றால் மேற்கண்ட வசனங்கள் பாகமாகாதவர்கள் விஷயத்தில் தாத்பர்யமாகும், பாகமானவர்கள் விஷயத்தில் தர்மாசரணம் தனித்தனியேதான். பிருஹஸ்பதியும்—

एकपाकेन वसतां पितृदेवद्विजार्चनम् ।
एकंभवेद्विभक्तानं तदेवस्याद्गृहे गृहे ॥

ஒரே பாகத்தால் (சமையலால்) வஸித்துவருபவர்களுக்கு பிதிர்க்கள், தேவதைகள், பிராம்மணர்கள் இவர்களைப்பூசிப்பது ஒன்றேயாகும், பிரிவாயிருந்தால் ஒவ்வொருவருடைய வீடுகள்தோறும் தனியே நடக்கவேண்டும். நாரதரும்—

भ्रातृणामविभक्तानां एको धर्मः प्रवर्तते ।
विभागे सति धर्मोऽपि भवेत्तेषां पृथत्पृथक् ॥

பாகமாகாதவரையில் ஒருவனே தர்மத்தைப் பொதுவாகச்செய்துவரலாம். பிரித்துக்கொண்டுவிட்டால் அவரவர் தர்மங்களும் தனித்தனியே செய்யவேண்டும்.

विभागे धर्मवृद्धिः பாகித்துக்கொள்வதால் தர்மம் விருத்தி என்று கௌதமமுனியும்கூறியுள்ளார். பிதாவைப்போலத்தன்தம்பிகளை பரிபாலித்துவரவேண்டும். அவர்களும்ஜேஷ்டப் பிராதாக்களிடம் தர்மமாக புத்திரர்கள்போல் இருந்துவரவேண்டும். இம்மாதிரியாக ஒன்ருகவோ? தனித்தனியாகவோ வஸித்துவரலாம், தனியாய் வசித்துவருவதால் தர்மம் செய்துவரத்தங்களுக்கும் அதிகாரம் சித்திக்கிறதால், தனியாக இருக்க விரும்புவது தர்மாசரணைக்கென்றே மனுவும் செப்பினர்.

தனித்திருப்பதில் தர்மம்செய்ய இடம் ஏற்படினும் தகப்பன் ஜீவித்து இருக்கும்போது புத்திரர்கள் எப்படி பாகம் பிரித்துக்கொள்ளக்கூடும்? அதிகாரமில்லையே? என்ருல் இங்கு மனு கூறுவதாவது,

தாயினிடத்தில் பக்தியால் இவ்வுலகையும், தந்தையிடத்தில் அன்பால் விண்ணுலகையும், குருபக்தியால் பிரம்மலோகத்தையும் பெருகிருன். இம்மூவரையும் மகிழ்வித்தால் எல்லா தர்மத்தும் அனுஷ்டித்ததாகிறது. இவர்கள் மூவரும் வருந்திஞல் அதஞல் இவன் செய்யும் எல்லா நல்வினையும் வீணேயாகின்றன. இம்மூவர் உள்ளவரை வேருருவரை அண்டியிருக்கக் கூடாது. இவர்களுக்கு இடையூறன்றியில் வேருகச்செய்யும், கார்யங்களையும் இவர்களிடம் தெரியப்படுத்தவேண்டும். என்றெல்லாம் இருக்கிறதே? அப்படியிருக்க எவ்விதம் தனியாக இருந்து தர்மாசரணம் செய்யலாம்? என்ருல் மேற்சொன்னவைகள் பிதாவின் அனுமதி பெருதவர்களுக்கு சொன்னதாகும். பிதாவின் அனுமதிபெற்றுத் தனியாயிருப்பவர்களுக்கு பிதாவின் உத்திரவை நடத்துவதே முக்கிய தர்மமாகும்.

जीवतोर्वाक्यकरणात् प्रत्यब्दं भूरिभोजनात् ।
गयायां पिण्डदानाच्च त्रिभिः पुत्रस्य पुत्रता ॥

பெற்றோர் வாழ்நாளில் கீழ்ப்படிந்து நடப்பதும், இறந்தநாட்களில், அன்னமளிப்பதும், கயையில் பிண்டமிடுவதும் மக்களை மக்களாக்குகிறது. என்பது அயோத்திய காண்டத்தில் ஸ்ரீராம வாக்கினாலும்கார்யத்தினாலும்வெளிப்படை. ऊर्ध्वं पितुः पुत्राः रिक्थं भजेरन्मातुः தந்தைதாய் காலத்திற்குப்பிறகு புத்திரர்கள் தனத்தைப் பிரித்துக்கொள்ளவேண்டும்'' என்று கௌதம முனியும்,

ऊर्ध्वं पितुश्च मातुश्च समेत्य भ्रातरस्समं ।
भजेरन् पैतृकं रिक्थम नीशास्ते हि जीवतोः ॥
त्रयएवाधना राजन् भार्या दासस्तथासुतः ।
यत्ते समधिगच्छन्ति यस्यैते तस्य तद्धनम् ॥

"பிதா மாதாக்களுடைய காலத்திற்குப்பின் ஸகோதரர்கள் ஒற்றுமையாய் தாயத்தைப்பிரித்துக் கொள்ளவேண்டும். மற்றும் பார்யை, தாஸன், புத்திரன் இம்மூவரும் தனக்குச் சொந்தமான தனமில்லாதவர்கள் அப்படி தனமுள்ளவர்களாக ஆனால் அவர்களுக்குள்ளதனம் இம்மூவரும் யாருடையவர்களோ அவருடையதாகின்றது'' என்று மனுவினபிப்பிராயமானதால், மூறையே வரவேண்டியது தாய்தந்தையர்களுக்குப் பிந்தியேயாயினும், தகப்பனுடைய அனுமதியினாலும், இஷ்டத்தாலும், தகப்பனே தாயபாகத்தைக் கொடுத்து தர்மத்தை செய்யும்படி ஏற்பாடு செய்யலாம்.

வேதமும் "மனு புத்திரர்களுக்கு தாயத்தைப் பரித்துக் கொடுத்தார்'' என்றும், ஆபஸ்தம்பரும்—

जीवन् पुत्रेभ्यो दायं विभजेत्समम् ।

ஜீவித்திருக்கும் பிதா புத்திரர் பிதிர்களுக்கு ஸமமாக தாயம் கொடுக்கவேண்டும். என்றும் இம்மாதிரியே கௌதமரும் கூறியிருப்பதால் குசனுடைய ஆக்ஞையால் நான்கு புத்திரர்களும் தனியே தர்மம் புரிந்துவந்தது யுக்தம்தான். ஸ்ரீராமனும் தன்னுடையவும், தன் தம்பிகளுடையவும், புத்திரர்களுக்கு ராஜ்யங்களைப் பிரித்துக்கொடுத்து இருப்பது உத்தரகாண்டத்தில் தெளி

வுற கூறப்பட்டிருக்கிறது. ஆனல் இந்த விபாகம் அதர்மிஷ்டர் களுக்கு ஏற்றதன்று. மனு-

सर्व एव विकर्मस्था नार्हन्ति भ्रातरो धनम् ॥

என்றிருப்பதால் தர்மபுத்தியுள்ளவர்களுக்கே ஏற்றதாகிறது. ஆகையால் பரதகண்டத்திலுதித்த மக்கள் யாவரும் பங்கிட்டுக் கொள்வதும் தர்மத்தை காற்கவே. "தர்மம் தலைகாக்கும்"

"காச்யப" உ. வெங்கட்ராமன்,
காட்டுமன்னர்கோவில்.

---

# அத்வைதமததமே வைதிகம்.

(418-வது பக்கத்தொடர்ச்சி)

பாட்டாஹஸ்யம் என்னும் கிரந்தத்தில் மீமாம்ஸக மூர்தன்யரான खण्डदेवमिश्र கண்டதேவமிச்ரரால் தர்மபதத்தின் அர்த்தவிசாரத்தில் ஸ்வல்பவித்யாஸம் சொல்லப்பட்டிருப்பதால் அதையும் ஸங்கிரஹமாக இங்கு எழுதுகிறேன். அதாவது—

தர்மம் அதர்மம் என்னும் பதங்களுக்கு என்ன பொருள். வேதத்தில் விதிக்கப்படும் கிரியை தர்மம் வேதத்தில் விலக்கப்படும் கிரியை அதர்மம் என்பது பொருந்தாது. ஏனெனில் வேதத்தில் ததி( தயிர்) பால் முதலிய சில திரவ்யங்களும், ஸாந்தத்யம் (துடர்ச்சியாய் ஆஜ்பத்தை ஸ்ரவிக்கச் செய்விதிலுள்ள துடர்ச்சி) முதலிய குணங்களுமாகிய கிரியையின் வேறுகிய வஸ்துக்களும், விதிக்கப்பட்டு தர்மங்களாகிறபடியாலும் அவ்விதமே 'யாகத்தில் வெள்ளியை தானம் செய்பக்கூடாது' என்று விலக்கப்பட்ட ரஜதம் முதலிய திரவ்யங்களும் அதர்மங்களாகிறபடியாலும் விதிக்கப்பட்ட கிரியை விலக்கப்பட்ட கிரியை தர்மாதர்மங்கள் என்று சொன்னல் கிரஹிக்கவேண்டிய அதுகள் கிரஹிக்க முடியாமல் விலகிப்போய்விடும். அப்பொழுது அதுகளையும் தர்மாதர்மங்களென்று கூறும் மீமாம்ஸாதி காரணங்களின் விரோதம் ஏற்படும். அதற்காக கிரியை என்னும் பதத்தைப் பிரயோகிக்காமல் வேதத்தில் விதிக்கப்படுவது தர்மம். விலக்கப்படுவது அதர்மம் என்று சொன்னல் கீழ்க்காட்டிய திரவ்யம் குணம் முதலியதும் கிரஹிக்கப்பட்டுப்போவதால் தோஷமில்லையென்று

கூறுவதும் ஸரியன்று. ஏனெனில் नानृतंवदेत् 'பொய்சொல்லக் கூடாது' என்று தடுக்கப்பட்டபிறகு விவாஹத்துக்காகப் பொய் சொன்னால் பாதகமில்லை சொல்லலாம் என்றும் अभ्यनुज्ञाविधि: என்கிற விதி விசேஷத்தால் ஸித்திக்கப்படுகிற அனிருத வசனமாகிய பொய் சொல்லுதலும் விதிக்கப்படுவதால் தர்மமாக ஆகத் தெரியும் அதுவே தர்மமன்று. ஏனெனில் விவாஹத்திற்காகச் சொல்லப்படும் அஸத்வசனமானது அதர்மமன்று என்று மாத்திரம் அப்யனுஜ்ஞாவிதிக்குக் கருத்தேயல்லாமல் அது தர்மமென்று கூடக்கருத்தன்று. இவ்விதமே விலக்கப்படுவது அதர்மமென்று சொன்னால் नातिरात्रेषोडशिनंगृह्णाति என்று விலக்கப்பட்ட சோடசிகிரஹணமும் (ஷோடசி என்னும் பாத்திரத்தால் ஸோம ரசத்தை கிரஹிப்பதும்) அதர்மமாகத்தெரியும். அதுவே அதர்மமன்று, ஏனெனில் அதிராத்ரம் என்னும் ஸோமயாகத்தில் ஷோடசிகிரஹணம் செய்தாலும் செய்யலாம் செய்யாமலிருந்தாலும் இருக்கலாம்விகல்பம் என்று அதை விலக்கியசுருதிக்குக் கருத்தேயல்லாமல் ஷோடசி கிரஹணம் அதர்மம் என்று கூடக்கருத்தன்று.

(தொடரும்)

போலகம் சு. ஸ்ரீராமசாஸ்திரிகள்.

---

# ஸ்ரீ சங்கரோபதேச ரத்னம்.

ப்ரஜாபதி வருஷம் சென்னை ஸ்ரீ மடத்தில் நடந்த ஸ்ரீ சங்கர ஜயந்தியன்று பல ஆஸ்திகர் கோரியபடி ஸ்தோத்ரம் முதல் ஸூத்ர பாஷ்யம் வரையிலுள்ள ஸ்ரீ சங்கராசாரியாளது ஸகலக்ரந்த ரத்னங்களிலுமுள்ள அபூர்வமான உபதேசங்களைத் தமிழில் சுருக்கமாக சித்திரைமீ முதல் மாத ஸஞ்சிகையாகவெளியிடும்படி ஸ்ரீ சங்கரமடம் "புராண ப்ரவசன ஸபையார்" தீர்மானித்தபடி இரண்டு மாத சஞ்சிகைகள் வெளிவந்திருக்கின்றன. வருட சந்தா ரூ. 2-0-0 வைத்திருக்கிறது. எத்தினை ஸஞ்சிகையில் முடியும் என நிச்சயிப்பதற்கில்லை. இது ஒருவரிருவர் லாபத்திற்காக ஆரம்பித்ததில்லை. பற்பல அபூர்வமான விஷயங்களை அத்வைதிகள் அறியவேண்டுமென்பதற்காக ஆரம்பித்தது. இதுவரை ஏகச்லோகீ உபதேச பஞ்சகம் மாயாபஞ்சகம் யதிபஞ்சகம் அத்வைத

பஞ்சாத்னம் மனீஷாபஞ்சகம் நிர்வாணஷ்டகம் தன்யாஷ்டகம் ஸ்வரூபானுசந்தானஷ்டகம் நிர்வாணமஞ்ஜரி ஜீவன்முக்தானந்த லஹரி அனாத்மருகர்ஹணம் பிரும்மக்ஞானவளிமாலா ப்ரபோத ஸுதாகாம் வெளிவந்திருக்கின்றன. அத்வைதிகளெவரும் இதை ஆதரித்து இஹபர நன்மை பெறுக. விரும்புவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு ரூ. 2-0-0 அனுப்பிப்பெறுக.

புராணப்ரவசன ஸபை தலைவர்.

வே. ஸோமதேவ சர்மா,

154- தம்புசெட்டி வீதி, சென்னை.

---

# வாரவிருத்தாந்தம்.

புதிய பிருஹஸ்பதி:-உலகில் ஓர் ஜாதியார் மற்றோர் ஜாதியாரைப் பகைக்கின்றனராம். இதையகற்ற புதிய பிருஹ்பதி ஒருவர் தோன்றி புதிய யுக்தியைக் கண்டுபிடித்துவிட்டார். ஸர் ஆர்தர்கீத் என்றவரே அந்த மேதாவி. இவர் உபதேசத்தைக் கேட்க லண்டன் அபர்டீன் ஸர்வகலாசாலை தவங் கிடந்தது. அவர் கண்டுபிடித்த அபூர்வ ஸித்தாந்தம் யாது? எல்லா ஜாதியினரும் ஜாதிபேதம் பாராமல் தங்கள் பெண்களை அன்யதேச ஜாதி மாப்பிள்ளைக்குக் கொடுத்து ஜாதியில்லாக் குழந்தைகளை உற்பத்திசெய்யவேண்டுமென்பதே உள்ளூரில் நடக்கும் சீர்திருத்தச் சபைகளில் இதே முதல் தீர்மானம் செய்யப்படுகிறது. இந்நாட்டு திருத்தக்காரர் மேனாட்டை ஸ்வர்க்கமாகவும் ஆங்குள்ள இதுபோல் பேசுபவர் பிருஹஸ்பதி ஒன்றும் மதிப்பர். இவர்களது கருணைத்ததும்பி சீக்ரத்தில் மிருகங்களுக்கும் ஸம உரிமையளிக்கும். அப்போது இந்த கலப்பு விவாஹ தர்மத்தை அவலம்பிப்பரோ?

சாரதா சட்டமேதற்கு? நவகானி ஜில்லாவில் ஸொத்துவரும் என்ற ஆசையால் 50-வயது மஹம்மதியர் 4-வயதுப்பெண்ணை பலாத்காரமாக மணந்தாராம். இது சாரதா சட்டப்படி குற்றமென வழக்குத் தொடரப்பட்டது. பலாத்காரமாக விவாஹம் செய்துக்கொண்டதே விவாஹத்திற்குப் போதுமானதாயிருக்க தன்கக்ஷி ஜயிப்பதற்காக இவரும் மற்ற வக்கீல்களும் இந்த

இறந்த சட்டத்தையும் சேர்த்துக்கொண்டு வாதாடுகின்றனர். இதை எவரும் கிளப்பாமலிருந்தால் க்ஷேமம்.

நல்லுபதேசத்தால் திருப்பவேண்டும்—கள்ளிக்கோட்டையில் ஓர் நம் பூதிரி இரண்டு மனைவிபிருக்க மூன்றும் மனைவி விவாஹம் செய்துகொண்டாராம். அஜ்ஜாதி சீர்திருத்த ஸபையில் அங்ஙனம் கூடாதெனதீர்மானித்ததால் பலசிறுவர் கல்யாணவீட்டில்எவரும் போகலாகாதென மறியல் செய்தனராம். பெண்வீட்டுக்காரர் கொடுக்கும் வரதக்ஷிணையைக்கொடுத்தால்தான் விவாஹத்தை நிறுத்துவதாகச் சொன்னாராம் அவர். பணத்திற்காக விவாஹ மென்றால் அவருடன் என்ன பேசுவது? விவாஹமோ நடந்து விட்டது. சிறுவர்கள் பெரியோரைக்கண்டு போராசையைகற்றி நல்வழிசெல்லும்படி உபதேசித்தால் பயன்பெறலாம். வீண் சண்டையால் பயனில்லை.

நீதியைவிட சட்டம் பெரிது:—ஆந்த்ர தேசத்தில் ஓர் சூத்ர ஸ்திரீக்கும் கிருஸ்துவனுக்கும் விவாஹம் நடந்து விட்டது. அது அன்யாயமானதுதான். இதைத்தடுக்க சட்டமில்லை. அதற்காக இந்த விவாஹத்தை நடத்தியவனுக்கு லைஸன் ஸில்லை என வழக்கு கொடுத்திருக்கின்றனர். சட்டத்திலும் நீதி நேருவதுண்டு பொருத்துப் பார்ப்போம்.

இப்போதென்னசெய்வர்? ஓர் வைஷ்ணவர் தனது பேத்தி யை எழுபது வயது கிழவன் மணக்க ஸம்மதிக்கவில்லை. அது நியாயமே. ஆதலின் சாரதாசட்டத்தைக்கூறி விவாஹத்தை நிறுத்தினர். 14-வயதானபிறகே அந்த பெண்ணையே மணக்கி றேனென்றார் அக்கிழவர். பாட்டனார் அவர் மணக்காதபடி உறுதிகேட்டனர் கோர்ட்டில். கீழ்கோர்ட்டில் ஏதாவது வியாஜ யம் நடத்தென்றது ஹைகோர்ட். வீணிலே சாரதாசட்டத்தைக் கிளப்பினார் ஸமூகத்தில் தீரவேண்டியதை கோர்ட்டிக்கிழுப்பது உசிதமல்ல.

எதிர்பார்த்ததே:—மதுரை தேசியசபை தீண்டாமை தீர்மா னத்தில் காங்க்ரஸ் மஹம்மதிய கிருஸ்துவருக்கும் பொதுவான தால் ஹிந்துக்களுக்குமாத்ரமுரிய ஆலயத்தில் பஞ்சமர்களை விட வேண்டுமென்ற தீர்மானத்தை கேவலஹிந்துக்களேதான் செய்ய வேண்டியதென சட்டப்படி ஒருவர் திருத்தப் பிரேரணைகொண்டு

வந்தார். அதை எதிர்த்த ஒருவர் தேவாலய விஷயமாக இந்திய சட்டஸபையில் ஆர். கே. ஷண்முகம்செட்டியார் ஓர் தீர்மானம் கொண்டுவரப்போவதாகச் சொன்னார். அது எத்தகையதோ அறியோம். ஆஸ்திகர்கள் உறங்கட்டும். இதுபோன்ற பல சட்டம் வருமென நாம் எதிர்பார்த்து அடிக்கடி கூறியதே? தைவமே சரணம்.

அபயதானம் செய்கிறார்:—வலங்கிமான் ஸ்ரீநிவாஸ சாஸ்திரி முதலில் ருதுமதீ விவாஹத்தைச் சட்டமாக்க முயன்று பிரஸித்த மானவர். அவர் தற்சமயம் இங்கிலாந்தில் லோகோத்தாரணம் செய்கிறார், இந்தியாவிற்கு ஸ்வராஜ்யம் வந்தால் பாதிரிகள் கிருஸ்தவ மதப்ரசாரம்செய்ய இடமுண்டு என்று இந்த சாஸ்திரி அவர்களுக்கு அபயதானம் செய்தார். நாம் மதாபிமானப் பற்றிருந்தால் அவர் இதுதானா சொல்வர்?

மைசூர் முன்னேறுகிறது:—தந்தை ஸொத்தில் புருஷர்களைப் போல் பெண்களுக்கும் ஸமபாகமுண்டென மைசூர் அரசாங்கம் ஓர் சட்டம்செய்ய ஸபை உத்தரவு கொடுத்ததற்கு திவான் சந்தோஷிக்கிறார். இச்சட்டம் இந்துக்களுக்குத்தானாம். மஹம்மதிய திவான் மஹம்மதியர்களுக்குறிய சீர்திருத்தம் செய்ய முன்வரவில்லை ஏன்? எல்லோருக்கும் காரணம் தெரியும். தற்சமயம் பாகத்தைவிடபெண்கள் விவாஹாதி ப்ரஸவாந்த செலவு அதிகமாவதால் சிலரிதை ஏற்கலாம். பலகாரணங்களைக்கொண்டு ஸ்திரீ, புத்ரன், சிஷ்யன் இவர்களிடம் தனம் கூடாது. இவர்கள் யாரைச்சேர்ந்தவர்களோ அவர்களையேசேரும் இவர்களுககு ஏதாவது தனங்கிட்டினால் என தர்மநூல் கூறிற்று சாஸ்த்ரம் ஓர் பக்கமிருக்க பாகம்பெற்ற பெண் தன்னிஷ்டப்படி அன்யஜாதியைமணக்க பலரை மணக்க மற்றும் லப அஸந்தர்ப்பங்களுக்கிடமளிக்கும். இந்திய சட்டசபையிலும் இந்த சட்டத்தை சோர் கொண்டுவந்திருக்கிறார். ஆஸ்திகர் முன் ஜாக்கிரதையுடன் எதிர்ப்பாராக.

காமாலை:—மஞ்சக்காமாலை என்றோர் நோய். அது கண்டார் உலகிலுள்ள வஸ்துக்களையெல்லாம் மஞ்சளாகக் காண்பர். மேனாட்டாருக்கு அர்த்தகாமமென இரண்டே புருஷார்த்தமென்பதும் அதற்கேற்றபடி விவாஹாதி சட்டங்களையும்செய்து அனுஷ்

டிப்பதும் உலகறிந்த ரகஸ்யம். மேயோவின் இரண்டாவது புத்தகத்தில் இந்தியர் காமுகர். அதற்காகத்தான் இளம்வயதிலேயே மணக்கின்றனர். ஏதோ அறியாது கல்பூரவாஸனையை என்பர். விவாஹத்தைப்பற்றி இவருக்கென்னதெரியும்? ஆனாலும் விவாஹத்சின் மேன்மையை உணர்ந்து நம்மவரும் தக்கபடி அனுஷ்டிக்கவில்லையே என்று நாம் வருந்தாமலிருக்க முடியாது.

கடவுள் காற்க:-கெல்லூரில் ஓர்கலாசாலைதினக்கொண்டாட்டத்தில் எல்லா ஜாதியினரும் ஸமபந்தி போஜனஞ் செய்யவேண்டுமென சிலர் கூறி அதைவிரும்பாத சிலர் தனியாகக்கொண்டாடினராம். விஷவனத்தில் ஆமிருதவல்லி போன்ற இவர்களைக் கடவுள்காக்கட்டும்.

ஸந்தேகத்தை விளக்குவாரா?:- 29-5-30 நாமக்கல்லுக்கருகில் தத்தகிரியென்ற குன்றின்மேல் ஓர் அவதூதஸ்வாமிகளால் தத்தாத்ரேய ஆலயங்கட்டி விசேஷமாக கும்பாபிஷேகம் செய்யப்பட்டதாம். இதுவரையில் ஆஸ்திகரனைவரும் ஸந்தோஷிப்பர். இவ்வாலயத்தில் தத்தாத்ரேய விக்ரஹத்திற்கு கீழ் கோவில் கட்டிய அவதூதர் விக்ரஹமும் அதன் கீழ் அவர் ஸமாதிக்காக ஓர் குஹையும் அமைக்கப்பட்டிருக்கிறதாம். கும்பாபிஷேகத்தன்று அவதூதரே அபிஷேகம் செய்தாராம். சென்னையிலிருந்து ஸ்ரீ வைத்யனாதசாஸ்திரிகள் உபன்யசித்தாராம். அவதூதஸ்வாமிகளோ ஷி சாஸ்திரிகளோ இவ்வாலயம் எந்த ஆகமரீதியாகக் கட்டப்பட்டது. அவதூதர் தன் விக்ரஹத்தை ஸ்வாமியின் கீழ் எப்படி வைத்திருக்கிறார். இது என்ன முறை. அதற்கும் பூஜை உண்டா. என தெரிவித்தல் நலம். இது வைதிக ஆகமாதிமார்க்கங்களுக்கு விரோதமில்லாததா என அறிய ஆஸ்திக உலகம் ஆவல் கொண்டுளது.

ஊர் வாழ ! நாம்வாழ !:- ஸௌராஷ்ட்ர மதாபிமானம் விருத்தியடைய உலகம் சுபிக்ஷமாயிருக்க யந்திரகாமாக ஓர் "விராத்ய தோஷ நிரோதக" யாகம் என ஒன்றைச் செய்தனர். இவரது நோக்கம் கொண்டாடத்தக்கதே. ஏனைய ஜாதியோர் கூட்டும் ஸபை தங்களுக்கு "இது வேண்டும் அது வேண்டும்" என்றே தீர்மானம் செய்கிறது. ஊர் வாழ்ந்தாலன்றோ நாம் வாழலாம்.

வே. ஸோமதேவசர்மா.